. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 19.03.2026 • மலர் 04 • இதழ்: 77 • Edition : Nagercoil • 19.03.2026 • Vol : 04 • Issue : 77 • Page : 4 • Rs. 5/-

## தி.மு.க. கூட்டணியில்

# இந்திய கம்யூ. க்கு 5 தொகுதிகள்

## ஒப்பந்தம் கையெழுத்தானது

சென்னை, மார்ச். 19

சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழலில், தி.மு.க. கூட்டணி கட்சிகளுடனான தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் வரை ஒதுக்க தி.மு.க. விருப்பம் தெரிவித்திருந்தது.

அதே சமயம், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில், கடந்த தேர்தலில் ஒதுக்கிய 6 தொகுதிகளை ஒதுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பாக ஏற்கனவே 3 கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட நிலையில், இன்று 4வது கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தையில் தி.மு.க.இந்திய கம்யூனிஸ்ட் இடையே தொகுதி பங்கீடு தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது. இதன்படி தி.மு.க. கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தொகுதி பங்கீடு ஒப்பந்தத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் கையெழுத்திட்டனர். தி.மு.க. கூட்டணியில் இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள், ம.தி.மு.க.வுக்கு 4 தொகுதிகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிக்கு 2 தொகுதிகள், கொ.ம.தே.க.வுக்கு 2 தொகுதிகள், ம.ம.க.வுக்கு 2 தொகுதிகள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



## கரூர் சம்பவம்

# சிபிஐ விசாரணையில் முறையான பதிலை வழங்கியிருக்கிறேன் -செந்தில் பாலாஜி பேட்டி



சென்னை, மார்ச். 19

கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந்தேதி கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணையை சிபிஐ நெருக்கி வருகிறது. இதுதொடர்பான விசாரணைக்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கடந்த 9ந்தேதி சிபிஐ அதிகாரிகள் அழைத்தனர். ஆனால் அன்றைய தினம் அவர் ஆஜராகவில்லை. இதனால் நேற்று வரவழைக்கப்பட்டார்.

நேற்று காலை 10:30 மணியளவில் சிபிஐ தலைமை அலுவலகம் வந்த செந்தில் பாலாஜியிடம் 11 மணிக்கு விசாரணை தொடங்கப்பட்டது. அவரிடம் சரமாரியாக கேள்விகள் எழுப்பப்பட்டு உள்ளன. மாலை 5 மணிக்கு அவரிடம் அதிகாரிகள் விசாரணையை முடித்தனர். 6 மணி நேரம் விசாரணை நடந்த நிலையில் மாலை 5.20 மணியளவில் அவர் வெளியே வந்தார்.

இந்த நிலையில் சிபிஐ விசாரணை நிறைவடைந்து சென்னை திரும்பிய செந்தில் பாலாஜியிடம், விசாரணை தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர் கூறியதாவது:

செப்டம்பர் 27ம் தேதி கரூரில் நடைபெற்ற துயர சம்பவம் குறித்து சிபிஐ அதிகாரிகள் சில கேள்விகளை முன் வைத்தனர். அந்த கேள்விகளுக்கு முறையான பதிலை வழங்கியிருக்கிறேன். குறிப்பாக சாட்சிகள் என்ற அடிப்படையில், அன்று நடைபெற்ற சில நிகழ்வுகள் குறித்து என்னிடம் கேள்விகளை முன் வைத்தனர். அந்த கேள்விகளுக்கு என்ன பதில் கூறினேன் என்பதை பொதுவெளியில் சொன்னால் சரியாக இருக்கிறது.

முறையான கேள்விகளுக்கு முறையான பதிலை வழங்கியிருக்கிறேன். சம்மனில் 10.30 மணியளவில் வர சொல்லி இருந்தனர். 10.15 மணிக்கு சென்று விட்டேன். 5 மணிக்கு விசாரணை நிறைவு பெற்றது. கேள்விகள் எண்ணிக்கை எத்தனை என்பது தெரியவில்லை. சிபிஐ அதிகாரிகளுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருந்திருக்கலாம். அதன் அடிப்படையில் அவர்கள் என்னை அழைத்திருக்கலாம். அங்கு களத்தில் இருந்து பணியாற்றிதன் அடிப்படையில், அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு முறையான பதில்களை வழங்கியுள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# ரஜினியை இழிவுபடுத்தும் நோக்கில் தரக்குறைவாக ஆதவ் அர்ஜுனா பேசியிருக்கிறார்

## இந்திய கம்யூ. கட்சி கண்டனம்

சென்னை, மார்ச். 19

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று பேசிய தவெக தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, திமுக கொடுத்த மிரட்டலால் நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரவில்லை என்று கூறியிருந்தார். அவரது பேச்சுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்தனர்.

ஆதவ் அர்ஜுனா உண்மைக்கு மாறான கருத்தைத் தெரிவித்துள்ளார் என்று நடிகர் ரஜினிகாந்த் நேற்று கண்டன அறிக்கை வெளியிட்டார். இதனிடையே நேற்று மாலையில் கொளத்தூரில் நடைபெற்ற தவெக பொதுக்கூட்டத்தில் பேசிய ஆதவ் அர்ஜுனா, 'நான் சொல்லவந்த நோக்கம் வேறு. நான் பேசியது உங்களுக்கு வருத்தத்தை கொடுத்திருந்தால், அதற்காக எனது வருத்தத்தையும், மன்னிப்பையும் பகிரங்கமாக கேட்டுக் கொள்கிறேன்' என்று கூறினார்.

இந்த நிலையில் ரஜினியை இழிவுபடுத்தும் நோக்கில் தரக்குறைவாக ஆதவ் அர்ஜுனா பேசியிருக்கிறார் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அக்கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னையில் கடந்த 12ம் தேதி தமிழக வெற்றிக்கழகம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு அக்கட்சியின் தேர்தல் மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உரையாற்றினார். அப்பொழுது, "எம்.ஜி.ஆருக்குப் பின், சிஸ்டத்தை மாற்ற வேண்டும் என வந்த நடிகர் ரஜினியை, அரசியலுக்கு வர விடாமல் திமுக மிரட்டியது. இப்போது ரெட் ஜெயன்ட் தயாரிப்பில் படம் நடிக்க போய்விட்டார். அரசியலுக்கு வரும் மன தைரியம் விஜய்க்கு மட்டும் தான் உள்ளது" என பேசியுள்ளார்.

தான் அரசியலுக்கு வருவதை கைவிடுவதற்கு தனது உடல் நலனே காரணம் என நடிகர் ரஜினிகாந்த் விளக்கம் அளித்திருந்ததை மறந்து விட்டு, ரஜினியை தைரிய மற்றவர் என ஆதவ் அர்ஜுனா பேசியிருக்கிறார். அதுமட்டுமன்றி, "ரெட் ஜெயன்ட்" தயாரிப்பில் ரஜினி நடிப்பதையும் இழிவுபடுத்தும் நோக்கில் தரக்குறைவாக ஆதவ் அர்ஜுனா பேசியிருக்கிறார். தமிழக மக்களின் பேரன்பை பெற்ற மூத்த திரைக்கலைஞர் ரஜினியை, ஆதவ் அர்ஜுனா ஏளனமாக பேசியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.




# அண்ணா அறிவாலயத்தில் திமுக நிர்வாகிகள் இடையே மோதல், கைகலப்பு



சென்னை, மார்ச். 19

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் உள்பட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன. திமுக கூட்டணியில் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் வேட்பாளர்கள் நேர்காணலையும் திமுக நேற்று தொடங்கியுள்ளது.

அந்த வகையில் இன்று கன்னியாகுமரியில் உள்ள சட்டமன்றதொகுதிகளில்போட்டியிடவிருப்பமனு அளித்தவர்களிடம் திமுக தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடைபெற்றது.

அப்போது கன்னியாகுமரியில் உள்ள கிள்ளியூர் தொகுதியில்திமுகவேட்பாளரைநிறுத்தவேண்டும் என்று அந்த தொகுதியை சேர்ந்த திமுக நிர்வாகிகள் சிலர் வேட்பாளர் நேர்காணலில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கூறியுள்ளனர். அதேவேளை, கிள்ளியூர் தொகுதியை கடந்த முறை காங்கிரசுக்கு கொடுத்துள்ளோம், இந்த முறையும் காங்கிரசுக்கு கொடுத்தாலும் வெற்றிபெற செய்வோம் என்று மு.க.ஸ்டாலினிடம் அந்த தொகுதியை சேர்ந்த திமுக நிர்வாகிகள் சிலர் கூறியுள்ளனர்.

திமுகவில் இரு தரப்பினரும் வேறுபட்ட கருத்துகளைதெரிவித்தநிலையில்இருதரப்பினரும் அண்ணா அறிவாலயத்தைவிட்டு வெளியே வந்துள்ளனர். அப்போது திமுக நிர்வாகிகள் இரு தரப்பினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில் இரு தரப்பினரும் மோதிக்கொண்டனர். திமுக நிர்வாகிகள் ஒருவரை ஒருவரை தாக்கி கைகலப்பில் ஈடுப்பட்டனர். இந்த சம்பவத்தால் அண்ணா அறிவாலயத்தில் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது.

## தமிழக சட்டசபை தேர்தல்;

# அதிகாரிகளுக்கு மாநில அளவில் முதல் கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன

### தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மை செயலாளரான அர்ச்சனா பட்நாயக் தகவல்



சென்னை, மார்ச். 19

2026ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலின் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் உள்ள சுமார் நான்கு லட்சம் தேர்தல் பணியாளர்களை உள்ளடக்கிய பல்வேறு பங்குதாரர்களுக்கு விரிவான மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், செலவின கண்காணிப்பு குழுக்கள், வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்கு சாவடி அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பணியாளர்களுக்கும் தேர்தல் நடைமுறையில் முழுமையான பயிற்சி அளிக்கும் வகையில் இந்த பயிற்சி திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு ள்ளன.

இந்த பயிற்சி திட்டங்கள் தொடங்குவதற்கு முன்னதாக, முக்கிய பங்குதாரர்களின் திறன், அறிவு மற்றும் தயார் நிலை ஆகியவற்றை மதிப்பிடுவ தற்காக இந்திய சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை நிறுவனம் (IIIDEM) மூலம் மதிப்பீடுகள் நடத்தப்பட்டன. இதனை தொடர்ந்து, முதற்கட்ட மாநில அளவிலான பயிற்சிகள் பின்வருமாறு நடத்தப்பட்டன: இதன்படி,

1. தேர்தல் நடத்துதல் குறித்து, மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு 09.03.2026 மற்றும் 10.03.2026 ஆகிய நாட்களிலும்

2. தேர்தல் நடத்துதல் குறித்து, தேர்தல் நடத்தும் அதிகாரிகள்/உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கு 03.03.2026 மற்றும் 04.03.2026 ஆகிய நாட்களிலும்

3. தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கு, தொழில்நுட்ப பயன்பாடு பற்றி 06.03.2026 நாளிலும் பயிற்சி அளிக்கப்பட்டது.

4. மாநில அளவிலான முதன்மை பயிற்சியாளர்களுக்கு 24.02.2026 மற்றும் 25.02.2026 ஆகிய நாட்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக, மண்டல அலுவலர்கள், வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள், வாக்கு சாவடி நிலை அலுவலர்கள், ஒருங்கிணைப்பு அதிகாரிகள் போன்ற மாவட்ட மற்றும் கள அளவிலான தேர்தல் செயல்பாட்டாளர்களுக்கு பயிற்சிகள் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட அளவிலான பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இந்திய தேர்தல் ஆணையத்தின் தற்போதைய அறிவுறுத்தல்களின் படி, அவர்களின் நடைமுறை அறிவை வலுப்படுத்தும் நோக்கில் இப்பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 6,803 மண்டல அதிகாரிகள், 75,032 வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள், 2,25,096 வாக்கு சாவடி அலுவலர்கள் உட்பட சுமார் நான்கு லட்சம் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அனைத்து நிலைகளிலும் உள்ள தேர்தல் தொடர்புடைய அலுவலர்கள் முறையாக பயிற்சி பெற்று, தேர்தலை சுதந்திரமான, நியாயமான மற்றும் திறமையான முறையில் நடத்துவதற்கு தங்களை தயார்படுத்தி கொள்வதை உறுதி செய்வதே இந்த பயிற்சி திட்டத்தின் நோக்கமாகும். "தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா" என தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மை செயலாளரான அர்ச்சனா பட்நாயக் தெரிவித்து உள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# தேர்தல் விழிப்புணர்வு பேரணி -விழிப்புணர்வு வாகனம்

## ஈரோடு ஆட்சியர் துவக்கி வைத்தார்



ஈரோடு மார்ச் 19

பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலும் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் கல்லூரி மாணவ, மாணவிகள் "வாக்களிப்பு என்பது நம் ஜனநாயகத்தின் அடித்தளம். ஒவ்வொரு குடிமகனின் வாக்கும் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தி கொண்டது. ஒரு வாக்கு பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும். வாக்கு செலுத்துவது நம் உரிமை மட்டுமல்ல, அது நம் கடமையும் ஆகும்." என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி சென்று வழியெங்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர். இப்பேரணியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கல்லூரி மாணவ, மாணவியர்களுடன் நடத்து சென்று வழியெங்கும் தேர்தல் குறித்த துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இப்பேரணியில் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

முன்னதாக, அதிநவீன மின்னணு வாகனம் மூலமாக தேர்தல் விழிப்புணர்வு குறும்படங்களைஒளிப்பரப்பும்வீடியோ விளம்பர வாகனத்தினை மாவட்ட ஆட்சியர் கந்தசாமி துவக்கி வைத்தார். இவ் வாகனமானது ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்துசட்டமன்ற தொகுதிகளிலும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் திரையிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தபடவுள்ளது.

தொடர்ந்து, வீரப்பன்சத்திரம் பகுதியில் பறக்கும் படை குழுவினர் வாகன சோதனையில் மேற்கொள்ளப்பட்டதை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இப்பேரணியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பிரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுகுமார், சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திருக்குமரன். ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன். உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கலைமாமணி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மும்மதத்தினர் பங்கேற்ற இஃப்தார் விழா!



திருப்பூர் மார்ச் 19

திருப்பூரில் தலைமையாகக் கொண்டு தமிழக முழுவதும் பொது மக்களுக்காகவே சேவை செய்து வரும் இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் திருப்பூர் காங்கேயம் சாலையில் உள்ள தனியார் திருமண மஹாலில் முன் மதத்தினர் பங்கேற்ற இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் சமத்துவத்தை போற்றும் விதத்தில் பங்கேற்று சிறப்பித்தனர் கலந்து கொண்ட அனைவருக்கும் கிப்ட் வழங்கப்பட்டது. இதில் நிறுவனத் தலைவர் இந்திராசுந்தரம். செயலாளர் ராஜா முகமது. விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர். இதில் மௌலவி முஃப்தி. உமர் பாரூக் மழாஹிரி தலைமை இமாம் மஸ்ஜிதே நூர் வட்டார ஜமாஅத்துல் உலமா சபை தலைவர் திருப்பூர். ஆன்மீக சொற்பொழிவாளர் சபாபதி. பாதிரியார் பிலிக்ஸ் ஆகிய மும்மத தலைவர்கள் பங்கேற்ற விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

### தென்காசியில்

# தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் சார்பில் அதிமுக தலைமையில் திமுகவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி மார்ச் 19

தென்காசி மாவட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு தமிழகத்தில் நடைபெற்று வரும் சட்ட ஒழுங்கு சீர்கேடுகளை தடுக்க தவறிய திமுக விடம் இருந்து தமிழகத்தை மீட்டெடுக்கும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் சார்பில் அஇஅதிமுக தலைமையில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற ஐந்து ஆண்டுகளில் கொலை, கொள்ளை, வழிப்பறி, கற்பழிப்பு, வயது வரம்பின்றி புழக்கத்தில் உள்ள போதை பொருள் புழக்கம் என பல்வேறு சட்டம் ஒழுங்கு சீர்கேட்டினால் பொது மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில் தமிழகத்தில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தமிழகத்தை மீட்டெடுக்கும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதேபோல் தென்காசி மாவட்டத்தில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு திமுக விடம் இருந்து தமிழகத்தை மீட்டெடுக்கும் வகையில் அதிமுக, பாட்டாளி மக்கள் கட்சி, பா.ஜ.க, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம்,தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கடையநல்லூர்சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பா, தென்காசி தெற்கு மாவட்ட அதிமுக செயலாளர் செல்வமோகன்தாஸ் பாண்டியன், முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி, தென்காசி நகர அதிமுக செயலாளர் சுடலை,பா.ம.க தெற்கு மாவட்ட செயலாளர் இசக்கிமுத்து, வடக்கு மாவட்ட செயலாளர் சீதாராமன், மாநில துணைத் தலைவர் சேது அரிகரன், மாவட்டத் தலைவர் குலாம், மாவட்ட துணை செயலாளர் ராஜேந்திரன், வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் சண்முகையா பாண்டியன், செங்கோட்டை நகரச் செயலாளர் சுப்பையா பாண்டியன், அச்சன்புதூர் பேரூர் தலைவர் மைதீன் பிச்சை, அச்சன்புதூர் பேரூர் செயலாளர் அப்துல் மஜீத், சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி மகளிர் அணி செயலாளர் குருவம்மாள் ,மேல நீலிதநல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் தங்கமுத்து ,ஒன்றிய துணைச் செயலாளர் சமுத்திரம், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி மகளிர் அணி செயலாளர் திருமலை வடிவு ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் குமாந்தாபுரம் முருகன் ,கடையநல்லூர் நகர செயலாளர் சங்கர் ,கடையநல்லூர் நகர தலைவர் சாஸ்தா ,செங்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் ரவி, செங்கோட்டை கிழக்கு ஒன்றிய தலைவர் சீவ நல்லூர் இசக்கி முத்து, உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது தி.மு.கவின் 5 ஆண்டு கால ஆட்சியில் நடைபெற்ற சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள் குறித்து பேசிய கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமுரளி பேசும் போது தூத்துக்குடி மாவட்டத்தில் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட மாணவியின் இறப்பிற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். இல்லையென்றால் விரைவில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் போது பிரதமர் மோடி ஆப்ரேஷன் சிந்தூர் நடத்தி நாட்டை பாதுகாத்தாரோ அதே போல் தமிழகத்திலும் ஆப்ரேஷன் சிந்தூர் நடத்தி தமிழகத்தை பாதுகாப்போம் என்று பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் கொலை, கொள்ளை கற்பழிப்பு போன்ற சட்ட ஒழுங்கு பிரச்சனைகளை தடுக்க தவறிய திமுக அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளை சார்ந்த முக்கிய நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கோவையில்

# தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



கோவை மார்ச்:19

கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், சட்ட ஒழுங்கு சீர்கேடுகள், போதைப் பொருட்கள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவறிய திமுக அரசை கண்டித்து தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில்,அதிமுக சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான, எஸ் பி வேலுமணி பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, முன்னாள் அமைச்சர்கள்,சட்டமன்ற உறுப்பினர்கள்,தோழமை கட்சி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### தக்கலை

# போக்குவரத்து காவலர்களுக்கு ஜூஸ் :எஸ்.பி. நடவடிக்கை



தக்கலை மார்ச் 19

கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து போக்குவரத்து காவலர்களைப் பாதுகாக்க, தமிழகம் முழுவதும் மார்ச் முதல் ஜூன் வரை சாலைகளில் பணியில் இருக்கும் போலீசாருக்கு மோர், பழச்சாறு மற்றும் தர்பூசணி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் தற்போதே ஏற்பட்டுள்ளதால், போக்குவரத்துக் காவலர்கள் எவ்வித இடர்பாடும் இன்றி பணி புரியும் வகையில் போக்குவரத்துக் காவலர்களுக்கு ஜூஸ் வழங்க முடிவு செய்யப்பட்டது

அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரியும் போக்குவரத்து காவலர்களின் நலனை கருத்தில் கொண்டு கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின்படி கோடை காலத்தில் போக்குவரத்து பணியில் இருக்கும் காவலர்களுக்கு வாட்டர் மெலோன் ஜூஸ் வழங்கப்பட்டது. இந்த ஏற்பாடு போக்குவரத்து போலீசாருக்கு வெயிலில் நிம்மதியாகப் பணியாற்ற உதவும்.

இந்த நிகழ்வானது தக்கலை உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் பார்த்திபன் தலைமையிலும் பத்மநாபபுரம் போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் மணிமாறன் மேற்பார்வையிலும் தக்கலை பேருந்து நிலையம் சந்திப்பில் வைத்து நடைபெற்றது.

### தேனி மாவட்டத்தில் சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு

# போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் தேர்தல் முன்னேற்பாட்டு பணிகள்

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



தேனி, மார்ச். 19

தேனி மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு, 200 போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றுவரும்தேர்தல்முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., (17.03.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, வாக்குச்சாவடிகளுக்கான அடிப்படை வசதிகள், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் VVPAT கருவிகள் பாதுகாப்பு ஏற்பாடுகள், தேர்தல் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி நிலை, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் செயல்பாடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. மேலும், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் முறையாக அமல்படுத்தப்படுகிறதா என்பதை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு தேவையான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன. தேர்தல் பணிகள் அனைத்தும் வெளிப்படையாகவும், சீர்மையாகவும் நடைபெற தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் தொடர்புடைய துறை அதிகாரிகள் மற்றும் தேர்தல் பணியாளர்கள் உடன் கலந்து கொண்டனர்.

### காரிமங்கலத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில்

# தருமபுரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்



தருமபுரி மார்ச் 19

தருமபுரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் காரிமங்கலத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் பி. பழனியப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி ஆகியோர் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் குறித்து முதலமைச்சர் வழங்கிய அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் குறித்து விளக்கிப் பேசினார்கள். வருகின்ற சட்டமன்ற தேர்தலில்மேற்குமாவட்டத்திற்கு உட்பட்ட பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தீவிர களப்பணியாற்றி திமுக கூட்டணி வெற்றி பெற பாடுபட வேண்டும். தமிழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கூட்டத்தில் சூடப்பட்டி சுப்பிரமணி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், கட்சி நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்கலந்து கொண்டனர்.

# இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

## நோன்பினையும் ஜக்காத்தினையும் நிறைவேற்றிய இஸ்லாமியர்கள் அனைவருக்கும்

## இக்லாஸ் பள்ளிவாசல்மற்றும் சமூக நல அறக்கட்டளை ரமலான் வாழ்த்து!!!



திருப்பூர் மார்ச்: 19

வேலம்பாளையம்இ க்லாஸ் பள்ளி வாசல். மற்றும் சமூக நல அறக்கட்டளை தலைவர் நிர்வாகிகள்.. வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்கூறியிருப்பதாவது.

புனித ரமலான் மாதம் என்பது இஸ்லாமியர்களுக்காக ஏக இறைவனான அல்லாஹுதாலா வினால் வழங்கப்பட்ட மிகப் பெரிய வெகுமதியாகும். ஆண்டு முழுவதும் ரமலானாகவே இருக்க வேண்டும் என உம்மத்தினர் விரும்புவார்கள். என ஓர் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய சிறப்பு வாய்ந்த மாதம் ரமலான். ஆண்டு முழுவதும் நோன்பு நோற்பது சிரமமான காரியம்தான் என்றாலும், புனித ரமலான்மாதத்தில் கிடைக்கின்ற நன்மைகளைக் கருத்தில் கொண்டு மனிதர்கள் அதனை விரும்புவார்கள் என்பதாக முகமது நபி(ஸல்) அருளியிருக்கின்றார்கள்.ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும்... ஒவ்வொரு மாதமும் மூன்று நோன்புகள் நோற்பதும் உள்ளத்தின் அழுக்குகளையும் , மன ஊசலாட்டங்களையும், நீக்கி விடும் என ஓர் ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நோன்பினுள் பலவிதமான நோக்கங்களும், பலன்களும், இருக்கின்றன. மார்க்கம் நோன்பை விதியாக்கி இருப்பதில் பலவிதமான பலன்கள் மனிதனுக்கு கிடைக்க வேண்டுமென்பது தான் நோக்கம். அவை அனைத்தும் நோன்பில் பசித்திருக்கும் பொழுது தான் கிடைக்கப் பெறுகின்றன.

அவற்றில் மிகப் பெரிய பலனாகிய மனோ இச்சயை முறியடித்தல் என்பது சிறிது நேரம் பசித்திருப்பதில் அடங்கியிருக்கிறது. ஷைத்தான் மனிதனின் உடலில் ரத்தம் போன்று ஊடுருவி சென்று கொண்டிருக்கிறான். நோன்பு கேடயமாகி ஷைத்தானின் செயல்களில் இருந்து தடுக்கும். நோன்பினால் மற்றொரு பலன் என்னவென்றால் ஏழைகள்போல் பசித்திருந்து அவர்களுடைய நிலைகளை உணர்வதாகும்.

இந்த நோக்கம், மாலை வரை பசி தெரியாமல் இருக்க ஸஹர் நேரத்தில் பால் இனிப்பு வகைகள் ஆகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு குடலை நிரப்பாமல் இருப்பதில்தான் உண்டாக முடியும். ஏழைகளுக்கு ஒப்பாக இருத்தல் என்பது கொஞ்சம் நேரம் பசித்திருப்பதின் மூலமே சாத்தியமாகும். என தலைவர் அப்துல் சமது. செயலாளர் ரபீக். பொருளாளர் சித்திக் மற்றும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

### அழகப்பபுரத்தில்
# கிளை நாடார் மகாஜன சங்க பொதுக்குழு கூட்டம்



கன்னியாகுமரி மார்ச் 19

அழகப்பபுரம் கிளை நாடார் மகாஜன சங்க பொதுக்குழு கூட்டம் அழகப்புரத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு நாடார் மகாஜன சங்க தலைவர் அருள் ராஜேஷ் தலைமை தாங்கினார். துணைச்செயலாளர் ஜாண் போஸ்கோ, சங்க சட்ட ஆலோசகர் தாமஸ் எடிசன், சங்க மக்கள் தொடர்பு அலுவலர் டாக்டர் கில்மன் புரூஸ் எட்வின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விக்டர் நவாஸ் வரவேற்று பேசினார். துணைத் தலைவர் பாபுஜி பிலிப்ஸ் நிகழ்ச்சி நிரலை தொகுத்து வழங்கினார். கூட்டத்தில் சிறப்பு விருந்தனர்களாக அசோகன், சுப்பிரமணயன், கணேசன், முருகன், டேவிட் லீஜ், மதன்குமார், மெரின் கிறிஸ்டோபர், ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஜாக்குலின் ஆஷா, ஜாண் ஜஸ்டின் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இணைச்செயலாளர் ஜாண்போஸ்கோ, பொருளாளர் விஜிலா மைக்கிள் ஆகியோர் அறிக்கை வாசித்தனர்.

சங்கத்திற்கு அதிகமான உறுப்பினர்களை சேர்த்த செயற்குழு உறுப்பினர் மரிய இருதய சுனிதாவுக்கு சிறந்த செயல் வீராங்கனை என்ற பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. தலைவர் அருள் ராஜேஷ் தலைமை உரையாற்றினார். ஜோஸ்பின் மேரி ஸ்டெல்லா நன்றியுரையாற்றினார். இக்கூட்டத்தில் சங்க செயற்குழு உறுப்பினர்கள் ஜோசப் சேகர், ஜாண் சேவியர் எட்மண்ட், இன்னாசென்ட் இளங்கோ, டென்னிஸ் பிரின்ஸ், சகாய டென்னிஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்

### பொதுத்தேர்தலை முன்னிட்டு
# சட்டமன்ற தொகுதிகளுக்கான பொது மற்றும் செலவின பார்வையாளர்கள் நியமனம்

நாகர்கோவில், மார்.19

கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தல் உள்ள கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மனாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும், தேர்தல் ஒரே கட்டமாக 23.04.2026 அன்று நடத்தப்பட உள்ளது. இதன்படி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்குமான தேர்தல் பணிகள் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி நடைபெற்று வருகிறது.

அதன்ஒருபகுதியாக கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு சுபாஸ்ரீ நந்தா, நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு அபுபக்கர் சித்திக், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு ராம்டின்லியானி, பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்கு பிரியங்கா பாசு இங்டி, விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு ஓம் பிரகாஷ் ராய், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்கு மனோஜ் குமார், ஆகியோர் பொது பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு ஆர்.ராஜேஷ், நாகர்கோவில் மற்றும் குளச்சல் சட்டமன்ற தொகுதிகளுக்கு சரண்ஜோஸ், பத்மநாபபுரம் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதிகளுக்கு நிஷாந்த், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்கு ஹரி ஓம் மீனா ஆகியோர் செலவின பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிக்களுக்கு காவல் பார்வையாளராக சுபாஷ் சந்திர தூபே நியமிக்கப்பட்டு ள்ளார். இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் தென்காசி தெற்கு மாவட்டத்திற்கான வேட்பாளர்கள் நேர்காணலில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வே. ஜெயபாலன் கலந்து கொண்டார் உடன் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் தென்காசி தெற்கு மாவட்டத்தில் விருப்ப மனு அளித்தவர்கள் உடனிருந்தனர்.

### குமரியில் நாளை
# திறந்தவெளியில் அழிந்து வரும் நெல் பாதுகாக்கப்படும் டாஸ்மாக் பொருட்கள் கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்




நாகர்கோவில், மார். 19

கன்னியாகுமரி மாவட்டத்தில் கும்பப்பூ சாகுபடி முடிந்து, நெல் அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. தமிழகஅரசு மாநிலம் முழுவதும் நெல் கொள்முதல் நிலையம் அமைத்திருப்பது போன்று குமரி மாவட்டத்திலும் 10 நெல் கொள்முதல் நிலையங்களை திறந்துள்ளது.

ஆனால் குமரி மாவட்டத்தில் கடந்த மூன்று, நான்கு வாரங்களாக அறுவடை செய்யப்பட்டு, அரசு நெல்கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை அதிகாரிகள் கொள்முதல் செய்வதற்கு பதிலாக... தட்டிக்கழித்து கொள்முதல் செய்யாமல் அலைக்கழித்து, விவசாயிகளுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக, விவசாயிகளால் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரப்பட்ட நெல் மலைபோல் நிலையங்களுக்கு உள்ளேயும், வெளியே சாலையிலும், அருகிலுள்ள காட்டுப்புறங்களிலும், மண்தறையிலும், திறந்த வெளியிலும் கொட்டப்பட்டு சேதமடைந்து வருகிறது. மேலும், தார்ப்பாய் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படாததால் விலங்குகளால் சேதமடைந்தும், மழையில் அழிந்து முளைவிட்டும் வருகிறது.

ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்குரிய தொகையைக்கூட.... பெரும்பாலான விவசாயிகளுக்கு உடனே வழங்காமல் இழுத்தடித்து மனஉளைச்சலுக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்து, குமரிமாவட்ட பாசனத்துறை தலைவர் வின்ஸ் ஆன்றோ தலைமையில் மாவட்டக்குழு உறுப்பினர்கள் செண்பகராமன்புதூர் உள்ளிட்ட நெல் கொள்முதல் நிலையங்களை நேரில் பார்வையிட்டு உண்மை நிலையை கண்டறிந்தனர்.

அதைத்தொடர்ந்து, ஒன்றிரண்டு தினங்களுக்குள் அனைத்து நெல்லையும் உடனே கொள்முதல் செய்வதுடன், தனியார் முதலாளிகளுடன் கூட்டு வைத்திருக்கக்கூடிய வேளாண்மைத்துறைமற்றும்நுகர்பொருள் வாணிபகழக ஊழல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு நெல்கொள்முதல் நிலையத்தில் போராட்டம் உடனே நடத்துவதென முடிவெடுத்துள்ளனர்.

இதற்கிடையில் செண்பகராமன்புதூர் நெல்கொள்முதல் நிலையத்தை ஒட்டியுள்ள 'டாஸ்மாக் குடோனில்' மதுபான ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்த மது வகைகளை பொக்கிஷம் போன்று பாதுகாத்து வாகனங்களில் ஏற்றி அரசுமரியாதையுடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆனால் விவசாயிகள் விளைவித்த அமுதமான நெல்லை அவர்களிடமிருந்து கொள்முதல் செய்து அப்போதைக்கப்போது வாகனங்களில் ஏற்றி 'சேமிப்பு கிடங்கிற்கு' அனுப்பி வைப்பதற்குபதிலாக தெருவில் சீரழிய விட்டுள்ளனர்.

ஆகவே, வருகிற 20/3/2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு செண்பகராமன்புதூர் நெல்கொள்முதல் நிலையத்தை ஒட்டி எதிரிலுள்ள 'டாஸ்மாக் குடோனுக்கு' வரும் மதுபான வாகனங்களை சிறைபிடிக்கும் போராட்டம் நடத்த உள்ளோம். என விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது.

### குமரியில்
# வாக்களிப்பதிலும் முதன்மை மாவட்டமாக திகழ கலெக்டர், பொதுமக்கள் கலந்துரையாடல்




நாகர்கோவில், மார்ச்.19

கன்னியாகுமரி மாவட்டத்தில் வரும் ஏப்ரல் 23ம் தேதி நடை பெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலில் 100 சதவீதம் அனைவரும் வாக்களிப்பது குறித்து, பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக மாவட்டத்திற்கு ட்பட்ட அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் கலை மற்றும் பொறியியல் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் முதல் வாக்காளர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் நடந்தது.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் முன்னிலை வகித்தார். தொடர்ந்து கலெக்டர் கூறுகையில்,

கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்தவரை, 6 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுமார் 15 லட்சத்து16 ஆயிரத்து 580க்கு மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளார்கள். அவர்களில் 18 வயது முதல் 19 வயது வரையிலான சுமார் 32,949 முதல் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளார்கள். அந்தவகையில் 24 வயதுக்குட்பட்ட வாக்காளர்கள் 10 சதவீதற்கு அதிகமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் வாக்காளர்களாகிய நீங்கள் உங்களுடைய ஜனநாயக கடமையினை ஆற்றுவதோடு மட்டுமல்லாமல், வாக்களிப்பதில் பெருமை கொள்ள வேண்டும். கன்னியா குமரி மாவட்டம் கல்வியில் சிறந்த மாவட்டமாக இருப்பது போல் வாக்களிப்பதிலும்முதன்மைமாவட்டமாக திகழ வேண்டும். இவ்வாறு பேசினார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்மாணவமாணவியர்களுடன்தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டதோடு, பேச்சுப்போட்டி க்கான தலைப்புகளை அறிமுகப்படுத்தி னார்கள்.

நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், தேர்தல் வட்டாட்சியர்கள், முதல்வர்கள், பேராசிரியர்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவ மாணவியர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

### காரமடை ரோட்டரி சங்கம் சார்பில்
# அரசு கலை அறிவியல் கல்லூரியில் இரத்ததான முகாம்




கோவை மார்ச்:19

கோவை மாவட்டம் காரமடை அருகே குட்டையூர் பகுதியில் உள்ள அரசு கலை அறிவியல் கல்லூரியில் காரமடை ரோட்டரி சங்கம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை இரத்த வங்கி, யூத் ரெட் கிராஸ் சொசைட்டி மற்றும் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் ஆகியவை இணைந்து இரத்ததானம் வழங்கும் முகாமை நடத்தினார்கள். இம்முகாம் ரோட்டரி சங்கத் தலைவர் குமணன் நடராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்த சிறப்பு முகாமில் கல்லூரியில் பயிலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தார்கள். அம்மாணவர்களை ரோட்டரி சங்க தலைவர் மற்றும் நிர்வாகிகள், கல்லூரி முதல்வர் ஆகியோர் சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்தி பேசினார்கள்.

இம்முகாமில் இரத்ததானம் செய்வதனால் சமூகத்திற்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், இதன் மூலம் பல்வேறு மனித உயிர்கள் காப்பாற்ற உதவ முடியும் என்ற விழிப்புணர்வை மாணவர்களிடையே எடுத்துரைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் உடன் ரோட்டரி சங்க மண்டல ஒருங்கிணைப்பாளர் சிவ சதீஷ்குமார், நிர்வாகிகள் செந்தில் குமார், தீபக், தினகரன், கல்லூரி முதல்வர் க.ஆ.ஜெயசங்கர், கல்லூரி ஒய்.ஆர்.சி. பொறுப்பாளர் பாண்டியராஜன், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவர் ராம் தீபிகா ஆகியோர் இருந்தனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100 சதவிகிதம் வாக்களிப்பதின் அவசியம் குறித்து "எனது இந்தியா எனது வாக்கு" குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .பெ.தங்கதுரை ஆகியோர் தலைமையில் அரசுத்துறை அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் வாக்காளர் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் தேர்தல் .எலன் ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### குமரி எஸ் பி அலுவலகத்தில்
# ஒருங்கிணைந்த தேர்தல் கட்டுப்பாட்டு அறை திறப்பு



நாகர்கோவில், மார்ச்.19

குமரி மாவட்ட காவல் துறை சார்பில் சார்பில் தேர்தல் தொடர்பான புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும், சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட நபர்கள் தொடர்பான விமர்சனங்களை கண்காணிக்கவும், சோதனை சாவடிகளை 24 மணி நேரமும் கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணிக்கும் வகையிலும், ஒருங்கிணைந்த சிறப்பு கட்டுப்பாட்டு அறை நாகர்கோவிலில் உள்ள எஸ் பி அலுவலகத்தில் அமைக்கப்பட்டது. இந்த கட்டுப்பாட்டு அறையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது:

பொதுமக்கள் அவர்களுடைய சட்டமன்ற தொகுதியில் பணப்பட்டுவாடா உட்பட ஏதேனும் தேர்தல் விதிமுறை மீறல்களில் இருந்தால் உடனடியாக காவல்துறையை தொடர்பு கொள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு செல்போன் எண்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

அந்த எங்களுக்கு பொதுமக்கள் நேரடியாக புகார் தெரிவிக்கலாம் ஏதேனும் புகைப்பட வீடியோ ஆதாரங்கள் இருந்தால் உடனடியாக அனுப்பி வைக்க முடியும். தகவல் கூறும் பொதுமக்கள் உடைய தகவல்கள் ரகசியம் காக்கப்படும். தேர்தல் சம்பந்தமான அவதூறு கருத்துக்கள், தேர்தல் விதிமுறை மீறி சமூக வலைத்தளங்களில் பதிவிடுதல், ஆகியவை கண்காணிக்கப்பட்டு உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களிடமிருந்து பெறப்படக்கூடிய தகவல்கள் மூலம் பிரச்சினைக்குரிய இடங்கள் அமைந்திருக்கக் கூடிய காவல் நிலைய எல்லைக்குள் பணியில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கும் வகையில் காவல் கட்டுப்பாட்டு அறையும் அமைந்துள்ளது. மேலும் அனைத்து சோதனை சாவடிகளையும் இந்த கட்டுப்பாட்டு அறையில் இருந்தே கண்காணிக்கும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் புகார் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்கள், வாட்சப் எண்கள் எஸ் பி யிடம் நேரடியாக புகாரளிக்க 8122223319, 7708239100 என்ற எண்களிலும், நாகர்கோவில் தொகுதி 7358776100; குளச்சல் தொகுதி 7358068100; கிள்ளியூர் தொகுதி 7358034100; கன்னியா குமரி தொகுதி 7305282100; விளவங்கோடு தொகுதி 7358063100; பத்மநாதபுரம் தொகுதி 7397463100 என்ற எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

இந்த வாய்ப்பினை ஒவ்வொரு குடிமகனும் பயன்படுத்தி நேர்மையான தேர்தலை உறுதி செய்திட மாவட்ட காவல் துறை சார்பாக கேட்டுக்கொள்கின். என பேசினார்.

# திருச்சி: ஆயுள் தண்டனை கைதி உயிரிழப்பு

திருச்சி, மார்ச். 19

திண்டுக்கல் மாவட்டம், பாரதிபுரத்தைச் சேர்ந்த ஜெ. கண்ணன் (59) என்பவர், திண்டுக்கல் அனைத்து மகளிர்காவல்நிலையத்தில் பதிவு செய்ய ப்பட்ட போக்சோ வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று திருச்சி மத்திய சிறையில் கடந்த 2025, மே 14ஆம் தேதி அடைக்கப்பட்டார்.

சிறுநீரக மற்றும் சுவாசப் பிரச்சனைகள் காரணமாக மார்ச் 8ஆம் தேதி திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கு சிகிச்சை பலனின்றி திங்கள்கிழமை உயிரிழந்தார். இதுகுறித்துதிருச்சி அரசு மருத்து வமனை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

### குமரியில்
# தேர்தல் பறக்கும் படையினரால் ரூ 10 லட்சத்திற்கு மேல் பறிமுதல்

நாகர்கோவில், மார்ச். 19

தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களை கண்காணிக்க தேர்தல் ஆணையம் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகிறது. இந்த வகையில் விளவங்கோடு தொகுதி பறக்கும் படையினர் நடத்திய சோதனையில் அதிகபட்சமாக 1லட்சத்து 96 ஆயிரத்து 870 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரி தொகுதியில் நிலையான கண்காணிப்பு குழுவினர் நடத்திய வாகன சோதனையில் ரூ.69,700 பிடிபட்டது. குளச்சல் தொகுதியில் நிலை கண்காணிப்பு குழுவினரால் ரூ.63,000 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை மொத்தம் ரூ. 10 லட்சத்து 18 ஆயிரத்து 520 ரொக்க பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் குளச்சல் தொகுதியில் மட்டும் இதுவரை அதிகபட்சமாக 7 லட்சத்து 51 ஆயிரத்து 950 பறிமுதல் செய்யப்பட்டது.

நாகர்கோவில், பத்மநாபபுரம் மற்றும் கிள்ளியூர் ஆகிய தொகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் பணம் எதுவும் பறிமுதல் செய்யப்படவில்லை. தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய மாவட்டம் முழுவதும் 24 மணி நேரமும் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100 சதவிகிதம் வாக்களிப்பதின் அவசியம் குறித்து "எனது இந்தியா எனது வாக்கு" குறித்து கையெழுத்து இயக்கத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .பெ.தங்கதுரை ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100 சதவிகிதம் வாக்களிப்பதின் அவசியம் குறித்து "எனது இந்தியா எனது வாக்கு" குறித்து கையெழுத்து இயக்கத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .பெ.தங்கதுரை ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தேனியில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி தேனி மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணி

### தேனி மாவட்ட ஆட்சியர் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்




தேனி, மார்ச். 19

தமிழக சட்டமன்ற பொது தேர்தல் 2026 வருகின்ற ஏப்ரல் மாதம் 23ந்தேதி தமிழகம் முழுவதும் ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. தேர்தல் அறிவிப்பு வெளியான நாளிலிருந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமுழுக்கு வந்தது.

இதனால் தேர்தல் ஆணையம் சார்பில் 100% வாக்குப்பதிவு செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இதேபோல் தேனி மாவட்ட நிர்வாகம் சார்பில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு 100% வாக்குப்பதிவினை வலியுறுத்தும் விதமாக விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது .

தேனி மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான ரஞ்ஜீத்சிங் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணியின் போது மாணவர்கள் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் 100% வாக்குப்பதிவு பதிவு செய்யும் விதமாக விழிப்புணர்வு பாதகைகள் ஏந்தி ஊர்வலமாக தேனி பங்களாமேட்டில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் இருந்து தேனி நேரு சிலை வரை ஊர்வலமாக சென்றனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர்,கல்லூரி மாணவ மாணவிகள்,மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் ஏராளமான பங்கேற்றனர்.

## குழந்தை பாலியல் கொலை வழக்கில் போலீஸ் அலட்சியம்!

### இன்ஸ்பெக்டரை கைது செய்யவேண்டும் கொளத்தூர் மணி வலியுறுத்தல்



கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே 2½ வயது பெண்குழந்தை பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட கொடூர சம்பவம் மாநிலம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த வழக்கில் போலீஸ் அலட்சியம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. குற்றவாளியை உடனடியாக கைது செய்ய தவறிய இன்ஸ்பெக்டர் சுமித்ரா மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

அஞ்செட்டி காவல் நிலையத்தில் பணியாற்றிய இன்ஸ்பெக்டர் சுமித்ரா, ஆரம்பத்திலேயே மருத்துவ அறிக்கையில் பாலியல் பலாத்காரம் மற்றும் சந்தேக மரணம் குறித்த தெளிவான தகவல் கிடைத்தும், அதனை பொருட்படுத்தாமல் அலட்சியமாக நடந்துகொண்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த தாமதமே குற்றவாளிக்கு தப்பிக்க வாய்ப்பளித்ததாக சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கொளத்தூர் மணி மற்றும் சமூக செயற்பாட்டாளர் பியூஷ் மானுஷ் ஆகியோர் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து கடும் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

அவர்கள் தெரிவிக்கையில் ஒரு குழந்தையின் உயிரை காவு கொண்ட இந்த வழக்கில் அலட்சியம் காட்டிய அதிகாரி மீது வெறும் இடைநீக்கம் போதாது; உடனடியாக குற்றவியல் வழக்குப் பதிவு செய்து கைது செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் சேசுராஜபுரம் பகுதியைச் சேர்ந்த பெரியநாயகம் மீது பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு, பிப்ரவரி 26ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

புதிய இன்ஸ்பெக்டர் கந்தவேல் பொறுப்பேற்ற பின்னரே வழக்கில் திருப்பம் ஏற்பட்டதாகவும், அதற்கு முன் நடந்த தாமதம் பல கேள்விகளை எழுப்புவதாகவும் கூறப்படுகிறது.

கிருஷ்ணகிரி போலீசார் மேற்கொண்ட விசாரணையில் இன்ஸ்பெக்டர் சுமித்ரா கடுமையான அலட்சியம் காட்டியதாக உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

ஆனால் சுமித்ரா மீது பாலியல், கொலை, வன்கொடுமை உள்ளிட்ட பிரிவின் வழக்கு பதியவில்லை, "ஒரு குழந்தையின் உயிர் போன பின்னரும் அலட்சியம் காட்டிய அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என சமூக செயற்பாட்டாளர் பியூஷ் மானுஷ் கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த சம்பவம் சமூக வலைதளங்களில் தீவிரமாக பேசப்பட்டு வரும் நிலையில், குழந்தைக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என சமூக அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

### ஈரோடு மாவட்டத்தில்

## ஆதி திராவிடர் விடுதலை பழங்குடி மக்களை மாற்ற வேண்டும்

### தலைமை தேர்தல் அதிகாரிக்கு வேண்டுகோள்

ஈரோடு மார்ச் 19

வேங்கைகள் கட்சி நிறுவனர் தமிழின்பன் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது பட்டியலினத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தராத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தாட்கோ உள்ளிட்ட துறைகளில் மூன்றாண்டுகளுக்கு மேலாக பணியாற்றுபவர்கள் தேர்தல் சமயத்தில் மட்டும் சரியாக பணியாற்றுவார்களா என்ற ஐயப்பாடு உள்ளது ஆகவே மூன்றாண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் பணியாற்றுகின்ற தாட்கோ, ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அதிகாரிகளை உடனடியாக மற்ற துறைகளுக்கோ அல்லது மாற்று இடத்திற்க்கோ மாற்றிட நடவடிக்கை வேண்டும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### முசிறியில்

## அதிமுக பிரமுகர் உறவினருக்கு ஆறுதல் கூறிய சிவபதி



திருச்சி, மார்ச். 19

திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர் அருகே இரண்டு தினங்களுக்கு முன்பு கார் ஒன்று இறைச்சி கடைக்குள் புகுந்த விபத்தில் சின்னப்பள்ளி பாளையம் அதிமுக கிளை செயலாளர் சுபாஷ் உயிரிழந்தார். இதை அடுத்து அவரது இல்லத்திற்குச் சென்ற முன்னாள் அமைச்சர் சிவபதி, சுபாஷின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து நிதி உதவி வழங்கினார். மேலும், 12 ஆம் வகுப்பு தேர்வு எழுத உள்ள மறைந்த சுபாஷின் மகளுக்கு ஆறுதலையும் தைரியத்தையும் அவர் கூறினார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

## 8 சட்டசபை தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம்



தஞ்சாவூர் மார்ச் 19

தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள 8 சட்ட சபை தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்ட கலெக்டரும், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருமான பிரியங்கா பங்கஜம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது. : தமிழகத்தில் சட்டசபை பொதுத் தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல் 23 )ஆம் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகு திகளுக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் .பொதுமக்கள் தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளவும். தேர்தல் நடத்தை விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டால் அது தொடர்பாக புகார் அளிக்கவும் .அந்தந்த சட்டசபை தொகுதியில் தேர்தல் நடத்தும் அலுவலர்களை தொடர்பு கொள்ளும் பொருட்டு தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது திருவிடைமருதூர் (தனி) சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரகுமார் (9445000280) ,கும்பகோணம் சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமலை(9445000466),பாபநாசம் சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ரவிச்சந்திரன் (7338801272) ,திருவையாறு சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் கண்ணன் ( 9445477832), தஞ்சாவூர் சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் நித்யா (9445000465) ,ஒரத்தநாடு சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ரேணுகாதேவி (9445074594), பட்டுக்கோட்டை சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சங்கர்(9445000467),பேராவூரணி சட்டசபை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் கலியமூர்த்தி (94436 43392). மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது

### ஈரோடு மாவட்டத்தில்

## தாட்கோ அதிகாரிகளை உடனே மாற்ற வேண்டும்; தலைமை தேர்தல் அதிகாரிக்கு வேண்டுகோள்

ஈரோடு மார்ச் 19

வேங்கைகள் கட்சி நிறுவனர் தமிழின்பன் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது பட்டியலினத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தராத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தாட்கோ உள்ளிட்ட துறைகளில் மூன்றாண்டுகளுக்கு மேலாக பணியாற்றுபவர்கள் தேர்தல் சமயத்தில் மட்டும் சரியாக பணியாற்றுவார்களா என்ற ஐயப்பாடு உள்ளது ஆகவே மூன்றாண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் பணியாற்றுகின்ற தாட்கோ, ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அதிகாரிகளை உடனடியாக மற்ற துறைகளுக்கோ அல்லது மாற்று இடத்திற்கோ மாற்றிட நடவடிக்கை வேண்டும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வாக்குச்சாவடியில் அடிப்படை வசதிகள் மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்வு தளம் அமைக்க வேண்டும்

### கலெக்டர் பிரியங்கா பங்கஜம் அறிவுறுத்தல்



தஞ்சாவூர் மார்ச் 19.

வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் செய்து தருவதுடன், மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்வு தளம் அமைக்க வேண்டும் என கலெக்டர் பிரியங்கா பங்கஜம் அறிவுறுத்தினார். தஞ்சாவூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட கரந்தை உமாமகேஸ்வரனார் மேல்நிலைப் பள்ளி, மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்படும் வாக்குச்சாவடிகளை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் திருவையாறு சட்டசபை தொகுதிக்குட்பட்ட காருக்குடி அன்னை நாராயணி நினைவு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் வாக்குச்சாவடி முன்னேற்பாடு பணியை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் வாக்குசாவடிகளில் மேற்கொள் ள வேண்டிய தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக் கைகள், வாக்குப் பதிவு மையங்களில் தேவை யான அடிப்படை வசதி கள் தவறாமல் செய்து தர வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்வு தளம் அமைக்க ப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் தொடர்ந்து ,அவர் பள்ளி யக்ரஹாரம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்ட நிலையான கண்காணிப்பு குழுவின் பணிகளையும் ஆய்வு செய்தார். பின்னர் அவர் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக த்தில் வாக்களிக்கும் எந்திரம் கட்டுப்பாட்டு கருவி வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையை பார்வையிட்டு, மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு தபால் வாக்குகள் பதிவு பணிகள் குறித்து அலுவலர்க ளுடன் ஆலோசித்தார்.

இதேபோல் அவர் பாபநாசம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பையும் பார்வையிட்டார். பின்னர் பொதுமக்களிடம் இருந் து பெறப்படும் புகார்கள் குறித்தும், அதன் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை தீர்வு காண சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார். ஆய்வின் போது தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நித்யா,கண்ணன், ரவிச்சந்திரன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பும் போக்குவரத்து பணிமனைகளில்

## திமுகவினர் பணிகள் செய்வதாக தேசிய ஜனநாயக கூட்டணியினர் மாவட்ட ஆட்சியரிடம் மனு



தருமபுரி மார்ச் 19

தருமபுரி மாவட்டத்தில் போக்குவரத்து பணிமனைகள் தருமபுரி, கிருஷ்ணகிரியை உள்ளிடக்கி சுமார் 10 க்கும் மேற்பட்ட பணிமனைகள் உள்ளது. மேலும் பேருந்து நிலையங்களில் நேரம்காப்பாளர் அறைகள் உள்ளிட்ட பகுதிகளில் திமுகவை சேர்ந்த தொழிற்சங்கத்தை சேர்ந்த நிர்வாகிகள் பலர் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பும் பணிக்கு செல்லமால் பணிமனைகளிலும் நேரம் காப்பாளர் அறைகளிலும் திமுகவினர் அமர்ந்து உள்ளதாக அதிமுக, பாஜக, பாமக, அமமுக உள்ளிட்ட தொழிற்சங்கங்களை சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணம் காட்டி ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள புகார் பெட்டியில் மனுவை போட்டு சென்றனர்.




திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், இஆப., அவர்கள் (18.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக முகப்பில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு மகளிர் திட்டம் சார்பில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தும் வகையில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பிரச்சார பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக முல்லை கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி அமைக்கப்பட்டுள்ள (MCMC) ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு குழு மையத்தில் தேர்தல் குறித்த விளம்பரங்கள் ஒளிபரப்புகள் கண்காணிக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.